செய்தி வெளியீடு எண்:40/2018 நாள்: 24.01.2018

**காஞ்சிபுரம், திருவள்ளுவர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் உள்ளாட்சி தேர்தல் வார்டுகள் மறுவரையரை குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடையேயான ஆலோசனைக்கூட்டம் மாநில உள்ளாட்சி வரையறை ஆணையத் தலைவரும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையருமான திரு.எம்.மாலிக் ∴பெரோஸ் கான், இ.ஆ.ப.,(ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது!**

காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி கூட்டரங்கில் உள்ளாட்சி தேர்தல் வார்டுகள் மறுவரையறை தொடர்பாக காஞ்சிபுரம், திருவள்ளுவர், கடலூர், விழுப்புரம் மாவட்டங்களின் மண்டல அளவிலான ஆலோசனைக்கூட்டம் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத் தலைவரும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையருமான திரு.எம்.மாலிக் ∴பெரோஸ் கான், இ.ஆ.ப.,(ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு வருகை தந்த அனைவரையும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

தமிழக தேர்தல் ஆணையத்தின் ஆணையின்படி உள்ளாட்சி தேர்தலை நடத்துவதற்கு ஏதுவாக உள்ளாட்சி அமைப்புகளின் வார்டுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு, வரைவு மறுசீரமைப்பு கருத்துரு வெளியிடப்பட்டுள்ளது. **மாவட்டங்களில் உள்ள நகராட்சி வார்டுகள், பேரூராட்சி வார்டுகள்,** மாவட்ட ஊராட்சி வார்டுகள், ஒன்றிய வார்டுகள், கிராம ஊராட்சி வார்டுகள் ஆகியவை மறு சீரமைப்பு செய்யப்பட்ட வரைவுகள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களில் இம்மறுசீரமைப்பு குறித்து கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் பெறும் பொருட்டு சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் பிரதநிதிகள் மற்றும் பொதுமக்கள் அறியும் வகையில் ஒட்டப்பட்டது. மேற்படி கருத்துகள் ஆட்சேபனைகளை 12.01.2018 அன்று வரை பெறப்பட்டன. அம்மனுக்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. அம்மனுக்களை அளித்த பொதுமக்கள் இன்று நடைபெற்ற கூட்டத்தில் மாநில தேர்தல் ஆணையரிடம் தங்கள் குறைகளை தீர்வு காணும்படி நேரடியாகவும் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களிடம் தேர்தல் ஆணையர் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக கோரிக்கைகளை கேட்டறிந்து, அவற்றின் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு தேர்தல் ஆணையர் அறிவுறுத்தினார். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பு மறுவரையறை ஆணைய தலைவர் அவர்களிடம் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 20 மனுக்களும், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 43 மனுக்களும், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 7 மனுக்களும், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 1 மனுவையும் அளித்தனர். இம்மனுக்களை பரிசீலனை செய்து. ஒருவார காலத்திற்குள் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, மறு வரையறை ஆணையத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும் என மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் திரு.க.பாஸ்கர் இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.சு.பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மறுவரையறை ஆணைய செயலர் திரு.டிஎஸ்.ராஜசேகர், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.இ.சுந்தரவள்ளி இ.ஆ.ப., கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரசாந்த் எம்.வாட்நெரே இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எல்.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், மாநகராட்சி ஆணையாளர், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.